சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **96 / 2013**

பெயர்: கந்தன் என்ற கந்தசாமி வா.சா.2 தேதி **15.11.2024**

1,3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. எனது மாமனார் பெயர் ராஜலிங்கம். மேற்படி ராஜலிங்கத்துடன் உடன் பிறந்தவர் ரத்தினம் , மருதமுத்து. மேற்படி மருதமுத்து , ராஜலிங்கத்தின் அண்ணன். மேற்படி ரத்தினம் ,மருதமுத்து உயிருடன் இல்லை. ரத்தினத்தின் மகன் பெயர் பிச்சைமுத்து அவரும் உயிருடன் இல்ல. பிச்சைமுத்து மகன் பிரபு அவர் உயிருடன் உள்ளார். மேற்படி மருதமுத்துவின் பிள்ளைகள் மாணிக்கம்மாள்,தனம், அம்சவள்ளி, ஜெயபால் ஆவார்கள். மேற்படி ஜெயபால் மனைவி விஜயா. மேற்படி ஜெயபால் இறந்துபோயிவிட்டார். மேற்படி ஜெயபாலுக்கு மூன்று குழந்தைகள். அதில் ஒருவர் ரத்தினகிரி ஆவார். மேற்படி ஜெயபாலின் குழந்தைகள் உயிருடன் உள்ளார்கள். மேற்படி மாணிக்கம்மாள் இறந்துபோக அவரின் பிள்ளைகள் கதிரவன், விஜயராகவன் உயிருடன் உள்ளார்கள். வழக்கு சொத்தின் சர் வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி மூன்றாவது பிரதிவாதி பெயரில் எந்தெந்த தேதியில் யார்யாரிடம் இருந்து சொத்து வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது.

2. சர்வே எண். 270/1 என்ற சொத்தின் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சர்வே எண். 270/1ல் மேற்கு பாதி சொத்து மருதமுத்துவிற்கு பாத்தியப்பட்டதா என்று எனக்கு தெரியாது. ராஜலிங்கத்திற்கும் அவருடன் உடன் பிறந்தவர்களுக்கும் ஏற்கனவே வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டது என்கின்ற சங்கதி எனக்கு தெரியும். மேற்படி பாக பிரிவினையில் எனது மாமனார் ராஜலிங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்தை பற்றி மட்டுமே எனக்கு தெரியும். மேற்படி மூன்றாவது பிரதிவாதியின் மாமனார் பெயர் மணிவேல் முத்துராஜா, மாமியார் பெயர் சரஸ்வதி. தாவா சொத்துக்களில் ச.எண்.109/2Bல் கட்டுப்பட்ட சொத்துக்கள் ஆரம்பத்தில் சரஸ்வதிக்கு பாத்தியப்பட்டது என்றால் அது மணிவேல் முத்துராஜாவிற்கு பாத்தியப்பட்டது. மேற்படி சரஸ்வதி 07.07.1989ம் தேதி மூன்றாவது பிரதிவாதிக்கு கிரையம் ஏற்பட்டது என்றால் சரிதான். ஆனால், மேற்படி கிரைய தொகை என் மாமனார் இராஜலிங்கம் தான் செலுத்தினார். மேற்படி 07.07.1989ம் தேதிய கிரைய பத்திரத்தில் நான் கையெழுத்து செய்யவில்லை. மேற்படி கிரையத்திற்கு நான் செல்லவில்லை. மேற்படி கிரைய பத்திரம் எழுதியது சம்பந்தமான நான் மேற்படி நடவடிக்கையில் பங்கேற்கவில்லை என் மனைவி தான் பங்கேற்றார்.

3. ச.எண்.109/2Bல் கட்டுப்பட்ட சொத்தைப்பொறுத்து மூன்றாவது பிரதிவாதியானவர் தனிப்பட்ட முறையில் அவரது பணத்தைக்கொண்டு கிரையம் பெற்றள்ளார் என்றும், மாமனார் பணம் கொடுத்ததாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. ச.எண்.380/2A3 ல் இராஜலிங்கம், ரெத்தினம், மருதமுத்து ஆகியோர்கள் பெயரில் தான் இருந்தது என்றால் தெரியாது, ஆனால் எனக்கு தெரிய இராஜலிங்கம் மற்றும் மருதமுத்து பெயரில் தான் இருந்தது. ச.எண்.113/1 ஆறாவது அயிட்ட சொத்து ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் இராஜலிங்கத்திற்கு பாத்தியப்பட்டது. அவருக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் பூர்வீக வகையில் கிடைத்தது. அதற்கு பத்திரம் உண்டா என்றால் தெரியாது. மேற்படி சொத்தை இராஜலிங்கத்திற்கு முன்னர் யார் வைத்திருந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்தை மூன்றாவது பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் ஆனால் அவர் மேற்படி இராஜலிங்கம் இறந்ததற்கு பின்னிட்டு அனுபவம் செய்து வருகிறார்.

4. மேற்படி ஆறாவது இலக்கச்சொத்தை மூன்றாவது பிரதிவாதி சொந்த உழைப்பின் மூலம் பெற்றார் என்றால் சரியல்ல. 12 வது இலக்க சொத்தான வீட்டில் 5வது பிரதிவாதியான சக்திவேல் குடியிருந்து வருகிறார் என்றால் எனது மாமியார் சிரும்பாயி குடியிருந்து வருகிறார். மேற்படி வீடு சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் எனது மாமனார் பெயரில் ரசீது உள்ளது. மேற்படி ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். மற்றொரு வீடான 13வது இலக்க சொத்தில் 3வது பிரதிவாதி குடியிருக்கிறாரா என்றால் மூன்றாம் பிரதிவாதி மற்றும் மாமியார் சிரும்பாயி குடியிருந்து வருகிறார். 12 மற்றும் 13 வது இலக்க சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள். ஆனால் 13வது இலக்க சொத்தில் சிறு பகுதியை எனது மாமனார் இராஜலிங்கம் கிரையம் வாங்கியிருந்தார். மருதமுத்துவின் பகுதியை நீக்கி மேற்படி சிறிது பகுதியை எனது மாமனார் கிரையம் வாங்கினார். என் மாமனார் கிரையம் வாங்கியதாக சொல்லக்கூடிய ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. வழக்கிலும் சொல்லவில்லை .

5. மேற்படி கிரைய ஆவணமும் என் வசம் இல்லை. 12 மற்றும் 13 வது இலக்கச் சொத்துக்கள் ஆரம்பத்தில் இராஜலிங்கத்திற்கும் மருதமுத்துவிற்கும் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களா என்று நான் சொல்கிறேனா என்றால் 12வது இலக்க சொத்து மேற்படியார்கள் இருவருக்கும் பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்து. 12 மற்றும் 13 வது இலக்க சொத்துக்களில் எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. 13வது இலக்க சொத்தில் மூன்றாவது பிரதிவாதி தனிப்பட்ட முறையில் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 12வது இலக்க சொத்தில் ஐந்தாவது பிரதிவாதி வீடு கட்டி , வரிசெலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 12 மற்றும் 13வது

இலக்க சொத்துக்களில் வீடு கட்டியது குறித்து எனது மாமனார் வீடுகட்டியதற்கான ஆவணம் எதுவும் இல்லை. 14வது இலக்க சொத்து ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஐயரிடமிருந்து வாங்கி எனது மாமனார் அனுபவம் செய்து வந்ததாக சொன்னார்கள். எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 43 வருடங்களுக்கு முன்பு நடைபெற்றது. 14வது இலக்க சொத்தை கிரையம் பெற்றது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி சொத்து யார் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்று தெரியாது.

(மேற்படி ஒன்று, மூன்று மற்றும் ஐந்து பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை நிறுத்திவைக்கப்படுகிறது )

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

(ஒம்/- ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.